**உலகலாவிய வெளியீட்டு அடிப்படை உதவி பங்குடமை செயற்திட்டம் - 2018**

---

உலகலாவிய வெளியீட்டு அடிப்படை உதவி பங்குடமை செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 திசெம்பர் 27 ஆம் திகதிய ரீஎவ் 099870 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II (பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

உலகலாவிய வெளியீட்டு அடிப்படை உதவி பங்குடமை செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி, நீர் வழங்கல மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வீட்டுரிமையாளர் மட்டத்தில் இருக்கின்ற மற்றும் புதிய சாக்கடை வலையமைப்புக்களுடன் சாக்கடை வீட்டு இணைப்புக்கள் அதிகரிப்பதன் மூலம் கொழும்பு பெரும்பாகத்தில் குறைந்த வருமான வீட்டுரிமையாளர்களிற்கு அதன் சுகாதார சேவைகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,559 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.10 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ரூபா 583.66 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5.08 மில்லியன் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 திசெம்பரில் தொடங்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2019 மார்ச் 31 வரை 03 தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2.** **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1.** **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 172.74 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி இலங்கை அரசாங்கத்திடமிருந்தான பெறுகைளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. | இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு குறைத்துக் கூறப்பட்டது. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் ஏற்றுக் கொளளப்பட்ட கொள்கையின் பிரகாரம் பெறுமதி சேர் வரி அரசாங்கத்தின் பங்களிப்பு பெறுகைகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கான அரசாங்கத்தின் மொத்த பங்களிப்பையும் வெளிப்படுத்துவதற்கு இயலக் கூடியவாறு உரிய கிரயம் கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மீளாய்வாண்டின் பொது செலுத்தப்பட்ட ரூபா 6.48 மில்லியன் தொகையான செயற்திட்ட கண்காணிப்பு பதவியணியினருக்கான வேதனம் கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | நடைபெறும் வேலைகள் குறைத்துக் கூறப்பட்டது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் பேணப்பட்ட பதிவேடுகளுடன் காலரீதியாக இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது அமுலாக்கப்பட்ட எளிமைப்படுத்திய மற்றும் வழமையான நீடித்தல் வேலைகளின் கூறின் கீழ் ரூபா 7.11 மில்லியன் தொகையான செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி மற்றும் ரூபா 1.06 மில்லியன் தொகையான அவற்றின் பெறுமதி சேர் வரியும் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி- | முறைப்படி கருத்துரைகள் தெரிவிக்கவில்லை. | மீளாய்வாண்டின் இறுதியில் சான்றுபடுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |

## 2.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரதான வேண்டுகையுடன் இணங்கி இருக்கவில்லை | முறைப்படி கருத்துரைகள் தெரிவிக்கவில்லை. | வேண்டுகை பின்பற்றப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

நேரடி கழிவகற்றல் இணைப்புக்கள், வழமையான நீடிப்புகள் மற்றும் எளிமைப்படுத்திய கழிவு இணைப்புகள் வழங்கல் மற்றும் புதிய பன்முகப்படுத்திய வலையமைப்பகள் என்வற்றின் கூறுகளின் கீழான செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணிசமானளவு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒரே தடவை சுகாதார முன்னெற்ற கூறின் கீழான நடவடிக்கைகள் ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம் மற்றும் ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல என்பன காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கூறு | நடவடிக்கை | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | அடையப்பட்டது | | | |
| ஒரே தடவை சுகாதார முன்னெற்ற | தெகிவளை, மொறட்டுவ, கொலன்னாவ மற்றும் ஜா-எலவில் தண்ணீர் சுத்திகரிப்ப அலகு பொருத்துதல். | 3,785 அலகு | 3,400 அலகு | செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கலில் கால தாமதங்கள் | செயற்திட்டத்தின் புனித தண்மை, போதிய தொழிலாளர் அணியினை ஈடுபடுத்துவதற்கு கஸ்ரங்களிற்கு முகம் கொடுத்தல், போன் குறித்த காரணங்கள் பிரதான ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமான தாமதங்கள் விளைந்திதிருந்த அதேநேரம் பல செயற் திட்டங்களின் முன்னோடி செயற்திட்டமான புதிய பரிமாணமொன்றை அமுலாக்கதல். ஆகவே, செயற்திட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு புதிய ஒப்பந்தங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. | நீடிக்கப்பட்ட செயற்திட்ட காலப்பகுதிக்குள் நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு ஒப்பந்தகாரர்களின் நடவடிக்கைகளை நெருக்கமாக கண்காணிக்கப்பட வேண்டும். |